[30th June 1962

திரு. மு. கருணாநிதி : அங்கே டாக்டர்கள் இல்லையென்று அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பப்பட்டன. அவைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லையா? பல முறை மனுக்கள் அனுப்பியும் வரவில்லையென்று சொல்வதால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் திருப்தி அடைவார்கள் என்று சர்க்கார் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இம்மாதிரி மனுக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. ஒரு எல்.ஐ.எம். டாக்டருக்கு 'அப்பாயின்ட்மெண்ட்' உத்தரவு போடப் பட்டது. ஆனால் அந்த டாக்டர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. மு. கருணாநிதி : அப்படி அப்பாயின்ட் செய்யப்பட்ட டாக்டர் அந்த அப்பாயின்ட்மெண்டை ஏற்றுக்கொள்ளாததற்கு என்ன காரணம் என்பதை அறிவிக்க முடியுமா? அதன் காரணம், சம்பளத்தைப் பொறுத்த விஷயமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர் அதை ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம் என்ன என்ற தகவல் இது வரையிலும் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் மெடிகல் ஆபீசர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் பட்டு அதற்கும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

Major town panchayats

* 57 Q.—Sri V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state whether the Government have decided to convert the major town panchayats into municipalities?

The Hon. Sri M. S. A. MAJID : No, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, 1957-ல் பல பெரிய பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை சீர்செய்யும் வகையில் அவைகளில் சிலவற்றை முனிஸிபாலிட்டிகளாக மாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டு அந்த அடிப்படையில் கெஜட்டிலும் நோட்டிபிகேஷன் செய்யப்பட்டது. அப்படி விளம்பரம் செய்யப்பட்டதில் நெல்லிக்குப்பம் பஞ்சாயத்தும் சேர்க்கப்பட்டிருந்தது. அப்படி விளம்பரம் செய்யப்பட்டு நெல்லிக்குப்பம் இன்னும் முனிஸிபாலிட்டியாக ஆக்கப்படவில்லை. அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தற்போது தாம்பரம், அல்லி நகரம், கோயில்பட்டி, தர்மபுரி முதலியவைகளைப்பற்றி ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படவிருக்கிறது. மற்றவைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

30th June 1962]

திரு. முனு ஆதி: கடந்த அமைச்சரவையில் ஸ்தல ஸ்தாபன அமைச்சராக இருந்த திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் தாம்பரம் போன்ற இடத்தை 1962-ம் ஆண்டில் முனிசிபாலிட்டியாக மாற்றுவதாக உறுதி அளித்திருக்கிறார். அந்த உறுதி எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதைப்பற்றி ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன். அல்லி நகரம் உள்பட பரிசிலனையில் இருக்கிறது. இன்னும் மற்ற பெரிய பஞ்சாயத்துக்களும் பரிசிலனையில் இருந்து வருகிறது. பரிசிலனை முடிந்த பிறகு அவைகளைப் பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஏற்கெனவே சொல்லியபடி நெல்லிக்குப்பம் முனிஸிபாலிட்டியாக ஆக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் சொல்லி இருக்கிறார்களே. அதன்படி அது எப்பொழுது அமுலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி பொதுக் கூட்டங்களில் சொன்னதால் பொது மக்கள் அதைப்பற்றி அறிய ஆவலாக இருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே நெல்லிக்குப்பத்தை எப்பொழுது முனிஸிபாலிட்டியாக ஆக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முனிசிபாலிட்டியாக மாற்றுவதாக இருந்தால் அங்கு இருபதாயிரம் ஜனத்தொகை இருக்க வேண்டும். மற்றும் ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகப்படியாக வருவாய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை நகராட்சியாக மாற்றுவது நியதி. அந்த முறையில் இருந்தால் முனிஸிபாலிட்டியாக மாற்றலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் நெல்லிக்குப்பத்தை மாற்றுவது என்றால் அது நான் சொன்னதாக பத்திரிகைகளில் வந்தால் அது தவறான செய்தியாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். மற்றும் அதை நகராட்சிக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் அதைப் பற்றி சர்க்கார் கவனம் எடுத்துக்கொள்ளும். அதன் பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

கோத்தகிரி ஆஸ்பத்திரி

***58 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோத்தகிரி ஆஸ்பத்திரிக்கு 1960-61-ம் ஆண்டுக்கு மருந்து செலவுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது ?

(இ) எத்தனை பேர்களுக்கு மருந்து கொடுக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (அ) Rs. 12,000 Sir.